## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 146/2020**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | தொழில் | : |
| தந்தை பெயர் | : ராமகிருஷ்ணன் | சமயம் | : |
| கிராமம் | : சோமசமுத்திரம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 45 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1, 2 எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் சோமசமுத்திரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராஜவேந்தன் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியவில்லை.

2. என்ன வழக்கு என்று எனக்கு தெரியாது. போலிசார் சாட்சி சொல்ல வரவேண்டும் என்று சொன்னதால் வந்தேன். வேறு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 08.02.2020 ந் தேதி மதியம் 03.00 மணியளவில் செஞ்சியில் உள்ள ராஜகோபால் டீக்கடை அருகே நான் இருக்கும்போது இவ்வழக்கின் எதிரிகள் அ.சா.1 ராஜவேந்தன் என்பவரை தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் , அதை நேரில் பார்த்ததாகவும், போலிசார் விசாரரணையில் தெரிவித்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

இல்லை.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 146/2020**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரவி | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ஆறுமுகம் | சமயம் | : |
| கிராமம் | : ஊரணிதாங்கல் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 40 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1, 2 எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சி ஊரணிதாங்கலில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். விழுப்புரம் ரோட்டில் டீக்கடையில் பிரச்சனை. அந்த டீக்கடையில் டீ சாப்பிட்டு கொண்டு இருந்தேன். அப்போது மணிகண்டன் என்பவர் இருசக்கர வாகனத்தில் அங்கு வந்தார். அவருடன் ஒருவரும் வந்தார். அந்த மணிகண்டன் என்பவர் ஆஜர் எதிரிகளா என்று எனக்கு தெரியவில்லை. அப்போது மணிகண்டன் என்பவரும் அவருடன் வந்தவரும் வக்கீல் என்றால் பெரிய மயிராடா என்று ராஜவேந்தன் என்பவரை பார்த்து திட்டினார்கள். நான் தான் மறித்துவிட்டேன். அன்றையதினம் மேற்படி பிரச்சனை சம்மமந்தமாக 3 மணி அளவில் செஞ்சி போலிசார் டீக்கடையில் வந்து விசாரணை செய்தார்கள். அப்போது நடந்த விவரத்தை போலிசாரிடம் நான் சொன்னேன். அதன்பிறகு சாட்சி கையெழுத்து கேட்டதால் போட்டு கொடுத்தேன்.

**குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 146/2020**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரவிச்சந்திரன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : பிள்ளைகோவிந்தன் | சமயம் | : |
| கிராமம் | : சோமசுந்தரம் | சாதி | : |
| வட்டம் | :செஞ்சி | வயது | :59 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1, 2 எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சி சோமசுந்தரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். 2020ம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. விழுப்புரம் ரோட்டில் உள்ள டீக்கடைக்கு வக்கீல் ராஜவேந்தன் என்பவரை அவருக்கு பின்னால் 2 நபர்கள் துரத்தி வந்தார்கள். நான் டீக்கடையில் இருந்து பார்த்தேன். நான் என்ன பிரச்சணை என்று துரத்தி வருவதை பார்த்து கேட்டேன். ஊரில் நிலப்பிரச்சணை என்றும், உறவினர் என்றும் சொன்னார். நானும் அங்கிருந்த 5, 10 நபர்களும் எதுவாக இருந்தாலும் ஊரில் பேசிக்கொள்ளுங்கள் என்று சமாதானப்படுத்தினோம். நாங்கள் அங்கிருந்ததால் வேறு எதுவும் செய்யவில்லை. துரத்தி வந்தவர்களை முன் பின் எனக்கு எதுவும் தெரியாது. அன்றைய தினம் 3 , 4 மணியளவில் செஞ்சி காவல் நிலையத்தில் இருந்து போலிசார் வந்தார்கள். சம்பவம் நடந்ததை பற்றி டீக்கடையில் விசாரித்தார்கள். அப்போது டீக்கடை ஓனர் பிரச்சணை எல்லாம் வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டார். பிறகு என்னிடம் சாட்சிக்காக கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன்.

**குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.